# குளித்தலை நகராட்சி

30.04.2020.ஆம் தேதி வியாழக்கிழமை மாலை 5.00 மணியளவில் நகராட்சி மன்ற அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரணக்கூட்டம்

ஆணையர் மற்றும் தனி அலுவலர்,
குளித்தலை நகராட்சி.

-------

பொருள்–01. குளித்தலை நகராட்சி ஆணையர் அவர்களின் ஏப்ரல்–2020.ஆம் மாதத்தின் தினசரி நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் பதிவு செய்யலாம்.

பொருள்–02. குளித்தலை நகராட்சி பொறியாளர் அவர்களின் ஏப்ரல்–2020.ஆம் மாதத்தின் தினசரி நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் பதிவு செய்யலாம்.

பொருள்–03. குளித்தலை நகராட்சிப் பகுதியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2019–2020.ஆம் ஆண்டு, மணத்தட்டை வார்டு எண்.2, வார்டு எண்.18 கந்தசாமிபிள்ளைதெரு, வார்டு எண்.18 காவல்காரதெரு ஆழ்குழாய் கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்துதல் பணிக்கு ரூ.4.10 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நாள்–16.03.2020.ல் ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று 01.04.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் 2 ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணி விபரம் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு சதவீதம் |
|---|---|---|---|
| 1) | குளித்தலை நகராட்சி மணத்தட்டை வார்டு எண்.2, வார்டு எண்.18 கந்தசாமிபிள்ளைதெரு, வார்டு எண்.18 காவல்காரதெரு ஆழ்குழாய் கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்துதல் | 1). திரு.எம்.செந்தில்குமார், 66/1–பெரியார்நகர், பெரியபாலம், குளித்தலை. | 0.58 % குறைவு |
| | | 2). திரு.ஆர்.என்.வெங்கடாஜலபதி, 2/20,சௌண்டீஸ்வரிஅம்மன் கோவில்தெரு, பெரியபாலம், குளித்தலை. | 1.39 % அதிகம் |

அலுவலக குறிப்பு– மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் ஒப்புநோக்கு செய்யப்பட்டதில், மதிப்பீட்டிற்கு 0.58 % குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திரு.எம்.செந்தில்குமார் என்பவரது ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
(ந.க.எண்.316/2020/இ1)

பொருள்–04. குளித்தலை நகராட்சி அலுவலகத்தின் நகர்மன்ற கூடம் மற்றும் சுகாதாரப்பிரிவு மேற்கூரை மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளது. எதிர்வரும் பருவமழையின் காரணமாக அலுவலக ஆவண காப்பறை ஆவணங்கள் மழைநீரில் நனைந்து மிகவும் பாதிக்கப்படும் என்பதால், புதிய மேற்கூரை மாற்றம் செய்து மராமத்து பணிகள் மேற்கொள்ள ரூ.6.42 லட்சம் செலவின மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. அவசர அவசியம் கருதி, மேற்படி செலவின மதிப்பீட்டிலான பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு–
1). மன்றம் அனுமதி வழங்கலாம்.
2). செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.
3). மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.525/2020/இ1)

..2..

பொருள்– 05. குளித்தலை நகராட்சி அலுவலகத்தின் பொதுப்பிரிவு, பொறியாளர் பிரிவு மற்றும் வரி வசூல் மையத்தின் மேற்கூரை மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளது. எதிர்வரும் பருவமழையின் காரணமாக ஆவணங்கள் மழைநீரில் நனைந்து மிகவும் பாதிக்கப்படும் என்பதால், புதிய மேற்கூரை மாற்றம் செய்து மராமத்து பணிகள் மேற்கொள்ள ரூ.7.95 லட்சம் செலவின மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. அவசர அவசியம் கருதி, மேற்படி செலவின மதிப்பீட்டிலான பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). மன்றம் அனுமதி வழங்கலாம்.
2). செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.
3). மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.526/2020/இ1)

பொருள்– 06. குளித்தலை சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2020–2021.ல் சட்டமன்ற உறுப்பினர் அவர்களால் பரிந்துரை செய்யப்பட்ட கெரோனா வைரஸ் (கோவிட்–19) முன் எச்சரிக்கை தடுப்பு நடவடிக்கைக்கு தேவையான நோய் தடுப்பு உபகரணங்கள் கொள்முதல் செய்துகொள்ள கீழ்க்கண்ட விபரப்படி நிர்வாக அனுமதி வழங்கி கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.அ3/1162/2020, நாள்–20.04.2020.ல் உத்தரவிடப்பட்டுள்ளது.

| வ. எண். | செயல்படுத்தும் அலுவலகம் | நோய் தடுப்பு உபகரணங்கள் விபரம் | தேவைப் பட்டியல் | மொத்தம் (ரூ.) |
|---|---|---|---|---|
| 1) | ஆணையர், குளித்தலை நகராட்சி. | Mahindra & Mahindra Blast Sprayer 600 liters | 1 No | 472000.00 |
| 2) | ஆணையர், குளித்தலை நகராட்சி. | Mahindra & Mahindra Tractor JIVO 245 | 1 No | 482720.00 |
| | | மொத்தம் | | **954720.00** |

மேற்கண்ட விபரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும்.

அலுவலக குறிப்பு– மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
(ந.க.எண்.534/2020/இ1)

பொருள்– 07. குளித்தலை நகராட்சி அலுவலகத்தில் அலுவலக உபயோகத்திற்கு பயன்படுத்தப்படும் தபால் தலைகளுக்கு 2020–2021.ஆம் நிதி ஆண்டிற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.12000/–க்கு மன்றத்தின் முன்அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). அவசர அவசியம் கருதி மன்றம் முன்அனுமதி வழங்கலாம்.
2). செலவினம் ரூ.12000/–ஐ, பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.536/2020/டி2)

பொருள்– 08. குளித்தலை நகராட்சி பொது பிரிவு மற்றும் குடிநீர் பிரிவு அலுவலக உபயோகத்திற்கு பயன்பாட்டில் உள்ள தொலைபேசி இணைப்புகள் மற்றும் நகராட்சி ஆணையர் மற்றும் பொறியாளர் அவர்களால் பயன்படுத்தக்கூடிய அலுவலக கைபேசி இணைப்புகளுக்கு உரிய கட்டணங்கள் செலுத்துவதற்கு 2020–2021.ஆம் நிதி ஆண்டுக்கு உத்தேச செலவினம் ரூ.1,25,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). மேற்படி செலவினம் ரூ.1,25,000/–ஐ, (ரூபாய் ஒரு லட்சத்து இருபத்து ஐந்தாயிரம் மட்டும்) பொது நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.826/2019/டி2)

பொருள்– 09. குளித்தலை நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் இயங்கிவரும் கீழ்க்கண்ட வாகனங்கள் மற்றும் புகை போக்கி இயந்திரங்களுக்கு 2020–2021.ஆம் ஆண்டுக்கான எரிபொருள், K.M.V.N.பிரேம்குமார் பெட்ரோல் பங்க், குளித்தலை மூலம் நேரிடையாக வாங்கிக்கொள்வதற்கு அனுமதியும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.15,00,000/–க்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | வாகனத்தின் எண். | வாகனத்தின் விபரம் |
|---|---|---|
| 1) | TN-47-AS-5370 | குப்பை லாரி |
| 2) | TN-47-X-0031 | குப்பை லாரி |
| 3) | TN-47-AS-5098 | ஆட்டோ |
| 4) | TN-47-AS-5109 | ஆட்டோ |
| 5) | TN-47-F-1522 | கழிவுநீர் வாகனம் |
| 6) | TN-47-AY-6449 | BEML Front & Back Loader |
| 7) | புகைபோக்கி இயந்திரங்கள் | |

அலுவலக குறிப்பு– 1). மன்றம் அனுமதி வழங்கலாம்.
2). இச்செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.555/2020/எச்1)

பொருள்– 10. கொரோனா (Covid-19) வைரஸ் நோய் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளும் பொருட்டு, கிருமிநாசினிகள் மற்றும் பாதுகாப்பு உபகரணம் கொள்முதல் செய்ய ஒப்பந்தப்புள்ளி, விலைப்புள்ளி கோராமல் அங்கீகாரம் பெற்ற நிறுவனங்களின்மூலம் வாங்குவதற்கு, அரசாணை கடிதம் எண்.74/J5(MA), Finance Salaries /2020, Dated:-01.04.2020–ல் அனுமதி அளிக்கப்பட்டு வரப்பெற்ற கடிதம் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் பதிவு செய்யலாம்.
(ந.க.எண்.463/2020/எச்1)

பொருள்– 11. குளித்தலை நகராட்சி ஆணையரின் முகாம் அலுவலகத்திற்கு தேவையான ஏ.சி., பர்னிச்சர் சாமான்கள் மற்றும் இதர பொருட்கள் சப்ளை செய்தல் பணி மேற்கொள்ள நாள்–10.03.2020.ல் ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று 23.03.2020 அன்று விலைப்புள்ளி பெறப்பட்டது. அதன்படி 3 விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அதன் விபரம் கீழ்வருமாறு.

| வ. எண். | பணி விபரம் | ஒப்பந்ததாரர் பெயர் | விலைப்புள்ளி தொகை |
|---|---|---|---|
| 1) | (1).வோல்டாஸ் ஏ.சி.–1, (2).கிராம்டன் சீலிங்பேன்–1, (3).சில்வர் டம்பளர்–10, (4).சில்வர் டம்பளர்–4, (5).ஆபிஸ் டேபிள் 4x2–1, (6).நீல்கமல் டைனிங் டேபிள்–1, (7).டபுள்காட்பெட் இலவம் பஞ்சு–1, (8).பிளாஸ்டிக் முரம்–1, (9).விளக்குமாறு–1, (10).மாப்செட்–1, (11).மேட்–2, (12).மேட்–4, (13).மேட்–1, (14).பிளாஸ்டிக் மக்–3, (15).பிளாஸ்டிக் வாளி–1, (16).பிளாஸ்டிக் வாளி–2, (17).பிளாஸ்டிக் பக்கெட்–1 உள்ளிட்டவற்றை சப்ளை செய்தல். | 1).P.S.V.கோபால்செட்டியார், 25,தெப்பகுளம்தெரு, குளித்தலை. | ரூ.51350/– |
| | | 2).சரவணாமெட்டல் மார்ட், 48,ஆண்டார்மெயின்ரோடு, குளித்தலை. | ரூ.56,330/– |
| | | 3).ராஜன் பாத்திரக்கடை, 52,பஜார்தெரு, குளித்தலை. | ரூ.53,165/– |

அலுவலக குறிப்பு– 1). மேற்கண்ட விலைப்புள்ளிகள் ஒப்புநோக்கு செய்யப்பட்டதில், குறைவாக விலைப்புள்ளி வழங்கியுள்ள M/s.P.S.V.கோபால்செட்டியார் நிறுவன விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
2). அவசர அவசியம் கருதி, ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.401/2020/இ1)

பொருள்– 12. குளித்தலை நகராட்சி ஆணையரின் முகாம் அலுவலகத்திற்கு தேவையான Microtek UPS மற்றும் Exide Tall Tubular Battery 150AH சப்ளை செய்தல் பணி மேற்கொள்ள நாள்–**31.03.2020.**ல் அனுமதி பெற்று **21.04.2020** அன்று விலைப்புள்ளி பெறப்பட்டது. அதன்படி **3** விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அதன் விபரம் கீழ்வருமாறு.

| வ. எண். | பணி விபரம் | ஒப்பந்ததாரர் பெயர் | விலைப்புள்ளி தொகை |
|---|---|---|---|
| 1)<br>2) | Microtek UPS 1125 HB UPS<br>Exide Tall Tubular Battery 150 AH | ஜே.எல்.எலக்ட்ரிகல்ஸ், குளித்தலை. | ரூ.22,500/– |
| | | ஸ்ரீவிநாயகா ஆட்டோ எலக்ட்ரிகல் ஒர்க்ஸ், குளித்தலை. | ரூ.23,000/– |
| | | உஷா எலக்ட்ரிகல்ஸ், குளித்தலை. | ரூ.23,500/– |

அலுவலக குறிப்பு– **1).** மேற்கண்ட விலைப்புள்ளிகள் ஒப்புநோக்கு செய்யப்பட்டதில், குறைவாக விலைப்புள்ளி வழங்கியுள்ள M/s. ஜே.எல்.எலக்ட்ரிகல்ஸ், குளித்தலை நிறுவனத்தின் விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**2).** அவசர அவசியம் கருதி, ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கி பணி மேற்கொள்ளப்பட்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண்.401/2020/இ1)**

*******

## குளித்தலை நகராட்சி

30.04.2020.ஆம் தேதிய சாதாரணக்கூட்டத் தீர்மானங்களின் உண்மைநகல்

| வ. எண். | பொருள் எண். | தீர்மானம் எண். | தீர்மான விபரம் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | 1 | 01 | ஏற்கப்பட்டது. |
| 2 | 2 | 02 | ஏற்கப்பட்டது. |
| 3 | 3 | 03 | அங்கீகரிக்கப்பட்டது. |
| 4 | 4 | 04 | அனுமதி அளிக்கப்பட்டது. |
| 5 | 5 | 05 | அனுமதி அளிக்கப்பட்டது. |
| 6 | 6 | 06 | பதிவு செய்யப்பட்டது. |
| 7 | 7 | 07 | அனுமதி அளிக்கப்பட்டது. |
| 8 | 8 | 08 | அனுமதி அளிக்கப்பட்டது. |
| 9 | 9 | 09 | அனுமதி அளிக்கப்பட்டது. |
| 10 | 10 | 10 | பதிவு செய்யப்பட்டது. |
| 11 | 11 | 11 | அனுமதி அளிக்கப்பட்டது. |
| 12 | 12 | 12 | அனுமதி அளிக்கப்பட்டது. |

ஒம்/—இரா.மோகன்குமார்,
ஆணையர் மற்றும் தனி அலுவலர்,
குளித்தலை நகராட்சி.

/ உண்மை நகல் /

ஆணையர்,
குளித்தலை நகராட்சி.